

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஒன்றியம் பந்தல்குடி ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் நடைபெற்ற சிறப்பு முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வேளாண்மைத் துறை சார்பாக விவசாய பெருமக்களுக்கு விதைகள் வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், பொதுக் குழு உறுப்பினர் கொப்பையாராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காரியாபட்டி முஷ்டக் குறிச்சி அரசு மருத்துவ மனையில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

### பாகனேரியில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7ஆம் நினைவு நாள் பொதுக்கூட்டம்!

### திருச்சி சிவா எம்.பி. – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்பு!

சிவகங்கை. அக்.4–

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தாலுகா பாகனேரியில் நாளை (5ம் தேதி– ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரின் ஏழாவது ஆண்டு நினைவு நாள், மொழிப்போர்த் தியாகி முன்னாள் மேலவை உறுப்பினர் பாகனேரி பி திருஞான சம்பத்தின் 45வது ஆண்டு நினைவு தினம் ,கழக முன்னோடி அழகாபுரி கிளைக் கழகச் செயலாளர் நடராஜன் 35 வது நினைவு தினம் ஆகியோரின் நினைவு தினத்தை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி கள் வழங்குதல் பொதுக் குழு உறுப்பினர் பி. டி .ஆர். முத்து தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராம லிங்கம், எம் .ஜெயராமன், பி.மந்தகாளை, நா. நெடுஞ்செழியன் ஆர் .எம்.கென்னடி, வே.ஆரோக்கிய சாமி ,யோக .கிருஷ்ணகுமார் ,மகளிரணி வி எஸ் .எம் .எஸ்தர்மேரிஸ்டிபன், சுப. தமிழரசன்,வீ.சி. கண்ணப்பன், எஸ்.பி.கண்ணன் ஏ .எல் .அழகப்பன், முத்தூர் கருப்பையா, எம் ஜெயராமன்,பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி பிரியதர்ஷினி கவிராஜ் சிவகங்கை நகர்கழகசெயலாளர் சிஎம்.துரை. ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

ராமமூர்த்தி, ஆர். குரு பரன், அண்ணாதுரை ஆகியோர் வரவேற்று பேசுகிறார்கள். நலத்திட்ட உதவிகளை கழக துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம் .பி, மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஆகியோர் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ். மாங்குடி. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.


கிளைக் கழகச் செயலாளர் சண்முகம் நன்றி கூறுகிறார் . நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பொதுக்குழு உறுப்பினர் பாகனேரி பி.டி .ஆர் .முத்து தலைமையில் கிளைக் கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

## தலைமைக் கணக்காளராக பல ஆண்டுகள் பணிபுரிந்த

# 'முரசொலி' மாணிக்கம் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, அக். 4 -**

**'முரசொலி' நாளிதழில் தலைமைக் கணக்காளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்த 'முரசொலி' மாணிக்கம் (வயது 93) அவர்கள் 1.10.2025 அன்று பெசன்ட் நகரிலுள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

தகவலறிந்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**மறைந்த மாணிக்கம் என்கிற அழகு மாணிக்கம் அவர்கள் முரசொலி அலுவலகத்தில் தலைமைக் கணக்காளராக 60 ஆண்டுகளுக்கும் மேல் பணி புரிந்து வந்தவர். அதற்கு முன் முரசொலி மாறன் அவர்களும், 'முரசொலி' செல்வம் அவர்களும் நடத்தி வந்த மேகலா பிக்சர்ஸில் பணி புரிந்தவர். பிறகு 'முரசொலி'யை வெளியிட்ட அஞ்சுகம் பதிப்பகத்தில் இணைந்து தலைமைக் கணக்காளராகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் மிகவும் அணுக்கமாகவும், நெருக்கமாகவும் இருந்தவர். 'நெருக்கடி நிலை' காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் துணையாக இருந்து பணிபுரிந்தவர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்தவர். இவரது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம் மகிபாலன்பட்டி என்ற கிராமமாகும்.**

**என்னிடமும் அன்புடனும், பற்றுடனும் பழகி வந்தவர் மாணிக்கம் அவர்கள்!**

**மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவரான அவர், முரசொலி நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குபவராகவும் செயலாற்றி வந்தார்.**

**மாணிக்கம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் துயரமுற்றேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வயது முதிர்வு காரணமாகவும், உடல் நலக் குறைவினாலும் பெசன்ட் நகரிலுள்ள இல்லத்தில் ஓய்வெடுத்து வந்த மாணிக்கம் அவர்கள் 1.10.2025 அன்று பகல் 12 மணியளவில் மறைவெய்தினார்.

மறைந்த அன்னாருக்கு அரசு மோகன் என்கிற மகனும், மலர்விழி என்கிற மகளும் உள்ளனர். அரசு மோகன் மருத்துவராக ஓமன் நாட்டில் பணிபுரிந்து வருகிறார். மகள் மலர்விழி மும்பையில் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரது துணைவியார் கஸ்தூரி அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மறைவெய்தி விட்டார்.

மறைந்த மாணிக்கம் அவர்களின் இறுதி ஊர்வலம், 2.10.2025 அன்று காலை 11 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு பெசன்ட் நகர் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



நாகர்கோவில் மாநகராட்சி, 24 வது வார்டுக்குட்பட்ட செம்மாங்குடி சாலை மற்றும் டதி பள்ளி சாலையில் மழைநீர் வடிகால் ஓடைகளை சீரமைத்து அதன்மேல் நடைபாதை அமைப்பது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளுடன் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, ரகுராமன், இ.ஜவகர், சந்தோஷ், ராஜா, ரோசிட்டா திருமால், ஆர்.சதாசிவன், என்.பி.துரை, மு. சேக்மீரான், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### திருச்சி என்.சிவா எம்.பி. – அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்பு!

# மேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அழைப்பு!

*மதுரை, அக்.4-*

*இன்று 4ஆம் தேதி மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மேலூரில் நடைபெறுவதாகவும் இதில் கழக துணை பொதுச் செயலாளர், மேலூர் தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி என்.சிவா எம்.பி., மண்டல பொறுப்பாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு, உள்ளிட்டோர் பங்கேற்று ஆலோசனைகள் வழங்க உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் கழக நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.*

*அதன் விபரம் வருமாறு:-*

*இந்தியாவின் நம்பர் ஒன் முதல்வர் என அனைவரின் பாராட்டுக்குரிய கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.*

*அதன் ஒருபகுதியாக மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (04.10.2025- சனிக்கிழமை) காலை 10 மணிக்கு மேலூர் மூவேந்தர் பண்பாட்டுக்கழக திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலா*



*ளர், நாடாளுமன்ற மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி என்.சிவா எம் பி, மண்டல பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் பங்கேற்று தேர்தல் நடவடிக்கை தொடர்பாக ஆய்வு நடத்தி பல்வேறு ஆலோசனைகள் வழங்க உள்ளனர்.*

*இக்கூட்டத்தில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பிஎல் ஏ டு, பி எல் சி உள்ளிட்ட வாக்குச்சாவடி பாகமுகவர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தி.மு.க.வினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.*



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் 157வது பிறந்த தினத்தை முன்னிட்டு காந்தி அருங்காட்சியத்தில் அமைந்துள்ள அவரது திருஉருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் மூவேந்திரன், பகுதி செயலாளர் அறிவு நிதி, வட்டச் செயலாளர் முத்துமோகன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.டி.மணிமாறன், முத்து கணேசன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் தமிழ் சந்திரன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

### நாகர்கோவில் மாநகராட்சி 24வது வார்டுக்குட்பட்ட பகுதியில்

# மழைநீர் வடிகால் ஓடைகளை சீரமைத்து நடைபாதை அமைப்பது தொடர்பாக ஆய்வு!

### மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் மேற்கொண்டார்!

*நாகர்கோயில், அக்.4-*

*கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் 02.10.2025 (வியாழக்கிழமை) அன்று காலை நாகர்கோவில் மாநகராட்சி 24வது வார்டுக்குட்பட்ட செம்மாங்குடி சாலை மற்றும் டதி பள்ளி சாலையில் மழைநீர் வடிகால் ஓடைகளை சீரமைத்து அதன் மேல் நடைபாதை அமைப்பது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.*

*ஆய்வில் செம்மாங்குடி சாலையின் ஒரு புறத்தில் நடைபாதை உள்ளது. மறு புறத்திலும் பொதுமக்கள் நடந்து செல்ல வசதியாக நடைபாதை அமைப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், செம்மாங்குடி சாலையில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்ற அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து, அண்ணா பேருந்து நிலையம் முன் இருந்து டதி பள்ளி வரை நடைபெற உள்ள நடைபாதை அமைக்கும் பணி மற்றும் இருசக்கர வாகன நிறுத்தத்திற்கான இட வசதியையும் பார்வையிட்டார். சாலையோரம் உள்ள மழைநீர் வடிகால் ஓடைகளை தூர்வாரி சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதனை மாநகராட்சி அதிகாரிகளுடன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*ஆய்வின் போது மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி செயற்பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர் இ.ஜவகர், உதவி நகரமைப்பு அலுவலர் சந்தோஷ், இளநிலை பொறியாளர் ராஜா, மாமன்ற உறுப்பினர் ரோசிட்டா திருமால், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், பகுதி செயலாளர்கள் என்.பி.துரை, மு.சேக்மீரான், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்

### அக்டோபர் 4 (2014)



**வாலாஜாபாத் ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.**

**தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றியக் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**